Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 186 | உள்ளூர் - 05.07.2026 ஞாயிறு | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 55 | * Issue 186 | வெளியூர் - 06.07.2026 திங்கள் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

சிவனின் அம்சம் கொண்ட 5 ராசிகள்!

வங்கி ஆஃப் பரோடா\ 86 காலியிடங்கள்!

தமிழகத்தில் மழைக்கு வாய்ப்பு!

ஊக்க ஊதியம் பெறும் ஆசிரியர்களுக்கு முக்கிய அறிவிப்பு!

## நாடாளுமன்ற மழைக்கால கூட்டம் ஜூலை 20- ல்!




புதுடெல்லி, ஜூலை. 05–

நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத் தொடர் அறிவிப்பை நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு ஜூலை 04–ம் தேதி வெளியிட்டார்.

நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத் தொடர் ஜூலை 20 முதல் ஆகஸ்ட் 13 வரை நடைபெறும் என மத்திய நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு அறிவித்துள்ளார். மத்திய அரசின் பரிந்துரையின் பேரில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு கூட்டத் தொடரை கூட்ட உத்தரவிட்டுள்ளார்.

25 நாட்கள் நடைபெறும் இந்த கூட்டத்தில் 19 அமர்வுகள் நடத்தப்பட உள்ளன. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு பிரச்சினைகள் மற்றும் முக்கிய மசோதாக்கள் குறித்து ஆக்கப்பூர்வமான விவாதங்கள் நடைபெற உள்ளன. மக்கள்தொகை அடிப்படை யிலான தொகுதி மறுவரையறை விவகாரம் முக்கிய விவாதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தென் மாநிலங்களின் தொகுதிகள் குறையக்கூடும் என்ற எதிர்ப்பைத் தொடர்ந்து, அனைத்து மாநிலங்களிலும் சுமார் 50% தொகுதிகளை அதிகரிக்கும் வகையில் மசோதாவில் மாற்றம் செய்ய மத்திய அரசு ஆலோசித்து வருகிறது. மேலும், திரிணமூல் காங்கிரஸ் 20 எம்.பி.க்களும், சிவசேனா (உத்தவ் அணி) 6 எம்.பி.க்களும் தங்களை தனி அணியாக அங்கீகரிக்கக் கோரி மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவிடம் மனு அளித்துள்ளனர். இந்த விவகாரமும் மழைக்கால கூட்டத் தொடரில் முக்கிய அரசியல் விவாதமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பெண் சக்தியைக் கண்டு பெருமிதம் கொள்கிறேன்: பிரதமர் மோடி!




புதுடில்லி, ஜூலை. 05–

குஜராத்தில் செமிகண்டக்டர் ஆலையில் பணிபுரியும் பெண்களுடன் கலந்துரையாடிய வீடியோவை சமூகவலைதளத்தில் பிரதமர் மோடி பகிர்ந்துள்ளார். அவர் பெண் சக்தியைக் கண்டு பெருமிதம் கொள்கிறேன் என குறிப்பிட்டுள்ளார்.

குஜராத் – சனந்த் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சிஜி செமி நிறுவனத்தின் செமிகண்டக்டர் ஆலையை திறந்து வைத்த பிரதமர் மோடி பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்திய செமிகண்டக்டர் திட்டத்தின் கீழ், மத்திய அரசால் முதற்கட்டமாக ஒப்புதல் அளிக்கப்பட்ட 4 முக்கிய திட்டங்களில் இதுவும் ஒன்றாகும். இந்த அதிநவீன ஆலை ரூ.7,500 கோடி முதலீட்டில் கட்டப்பட்டுள்ளது.

இந்த ஆலையில் பணிபுரியும் பெண்களுடன் கலந்துரையாடிய வீடியோவை சமூக வலைதளத்தில் பிரதமர் மோடி வெளியிட்டுள்ளார். அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: சனந்தில் உள்ள செமிகண்டக்டர் ஆலையின் திறப்பு விழாவின் மிகச் சிறப்பான தருணங்களில் ஒன்று, அங்கு பணிபுரியுபவர்களுடன் உரையாடக் கிடைத்த வாய்ப்பாகும். அங்கு பணிபுரியும் ஊழியர்களில் பெரும்பான்மையானோர் பெண்கள்.

அவர்கள் இந்தியாவின் தொலைதூரப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள்; அவர்களில் பலர் பழங்குடியினப் பின்னணியைக் கொண்டவர்கள். ஆனால், அவர்களின் குறிப்பிடத்தக்க மன உறுதி, அவர்கள் செமிகண்டக்டர் பற்றி கற்று அறிவதை உறுதி செய்தது. அவர்கள் பயிற்சிக்குச் சென்று, இன்று இந்தியாவின் செமிகண்டக்டர் துறையில் மேலும் வலு சேர்க்கிறார்கள். பெண் சக்தியைக் கண்டு பெருமிதம் கொள்கிறேன். இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.

## முதலீட்டாளர்கள் கவனத்திற்கு!

# பங்குச்சந்தையில் அதிரடி என்.எஸ்.இ-ன்

## புதிய 'குளோசிங் ஆக்ஷன் செஷன்'




புதுடெல்லி, ஜூலை. 05–

இந்தியாவின் முன்னணி பங்குச் சந்தையான நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் (என்.எஸ்.இ), 'குளோசிங் ஆக்ஷன் செஷன் (Closing Auction Session – CAS)' என்ற புதிய முறைக்கான மாதிரி சோதனையை நடத்தியுள்ளது. பங்குகளின் இறுதி வர்த்தக விலையை மேலும் துல்லியமாக நிர்ணயித்து, கடைசி நிமிடங்களில் ஏற்படும் திடீர் விலை ஏற்ற, இறக்கங்களை கட்டுப்படுத்துவதே இந்த புதிய முறையின் முக்கிய நோக்கமாகும்.

புதிய CAS முறையில், வர்த்தக நிறைவு நேரத்திற்கு முன் குறிப்பிட்ட காலப்பகுதியில் வாங்குதல் மற்றும் விற்பனை ஆர்டர்கள் அனைத்தும் ஒன்றாகச் சேகரிக்கப்படும். பின்னர், அதிகபட்ச பரிவர்த்தனை நடைபெறும் விலையை கணினி தானாகக் கணக்கிட்டு, அதையே இறுதி விலையாக நிர்ணயிக்கும். இதன் மூலம் சந்தை விலை நிர்ணயம் மேலும் வெளிப்படையாகவும் நியாயமாகவும் அமையும்.

இந்த மாற்றம் அமலுக்கு வந்தால், இன்ட்ராடே வர்த்தகம், மார்ஜின் டிரேடிங் (MTF), F&O எக்ஸ்பைரி விலை கணக்கீடு உள்ளிட்ட பல வர்த்தக நடைமுறைகளில் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. அதேபோல், பங்குத் தரகர்கள் (Brokers) தங்களின் தானியங்கி வர்த்தக அமைப்புகள் மற்றும் அல்காரிதம்களை புதிய முறைக்கு ஏற்ப மாற்றியமைக்க வேண்டியிருக்கும்.

மாதிரி சோதனையில், ஆர்டர் பதிவு, விலை கண்டறிதல் மற்றும் வர்த்தகம் ஆகியவை தனித்தனி நேர அட்டவணைப்படி நடத்தப்பட்டன. இந்த சோதனை வெற்றிகரமாக நிறைவடைந்தால், விரைவில் புதிய CAS முறை அதிகாரப்பூர்வமாக நடைமுறைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, முதலீட்டாளர்கள் மற்றும் டிரேடர்கள் தங்களின் டிரேடிங் பிளாட்ஃபார்ம், ஆர்டர் வகைகள், புரோக்கர் அறிவிப்புகள் ஆகியவற்றை முன்கூட்டியே சரிபார்த்து, புதிய விதிமுறைகளுக்கு ஏற்ப தயாராக இருக்க வேண்டும். இந்த மாற்றம் இந்தியப் பங்குச் சந்தையை சர்வதேச தரத்திற்கு உயர்த்துவதோடு, நீண்டகாலத்தில் முதலீட்டாளர்களுக்கு நிலையான மற்றும் நம்பகமான விலை நிர்ணயத்தை வழங்கும் முக்கிய முன்னேற்றமாகக் கருதப்படுகிறது.

## துணை பிரதமர் ஆகும் அமித்ஷா?



புதுடெல்லி, ஜூலை. 05–

வரவிருக்கும் பஞ்சாப் சட்டமன்றத் தேர்தலைக் கருத்தில் கொண்டும், தேசிய ஜனநாயகக் கூட்டணியை மேலும் வலுப்படுத்தும் நோக்கிலும் அமைச்சரவை மாற்றம் திட்டமிடப்பட்டுள்ளது.

மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு பதிலாக ரிசர்வ் வங்கி முன்னாள் ஆளுநரும், பிரதமர் மோடியின் முதன்மை செயலாளருமான சக்திகாந்த தாஸ் அந்த பதவியில் அமர்த்தப்படலாம் என கூறப்படுகிறது. மேலும் தகவல் தொடர்பு மற்றும் ரெயில்வே அமைச்சகம் அஸ்வினி வைஷ்ணவ் வசம் உள்ள நிலையில், ரெயில்வே இலாகா வேறொருவருக்கு மாற்றப்பட வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சருமான நிதின் கட்கரிக்கு கூடுதல் பொறுப்புகள் வழங்கப்பட வாய்ப்புள்ளது.

மகாராஷ்டிராவில் ஆப்ரேசன் டைகர் மூலம் உத்தவ் சிவசேனாவின் 6 எம்.பிகளை என்டிஏ கூட்டணி பக்கம் இழுப்பதில் மூளையாக செயல்பட்ட ஏக்நாத் ஷிண்டேவின் மகனும் கல்யாண் தொகுதி எம்பியுமான ஸ்ரீநாத் ஷிண்டேவுக்கு மத்திய அமைச்சர் பதவி வழங்கப்பட வாய்ப்பிருப்பதாக கூறப்படுகிறது.

இதை விட உன்னிப்பாகக் கவனிக்கப்படும் விஷயம், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு 'துணைப் பிரதமர்' பதவி வழங்கப்படுவது ஏறத்தாழ உறுதி செய்யப்பட்டுள்ளது என தகவல் கசிந்துள்ளது. இதற்காக பாஜக தேசியத் தலைவர் நிதின் நபின் கட்சியின் முக்கியத் தலைவர்களுடன் தொடர் ஆலோசனைக் கூட்டங்களை நடத்தி வருகிறார். தற்போது துணை பிரதமர் பதவி இல்லாத நிலையில் அமித் ஷாவுக்காக அது ஏற்படுத்தப்பட வாய்ப்புள்ளதாக டெல்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதில் ஆர்எஸ்எஸ்சின் அழுத்தமும் இருக்கலாம் எனவும் ஒரு கருத்து நிலவுகிறது.

பிரதமர் மோடி 75 வயதை எட்டிய நிலையில் பாஜக கொள்கை படி அவர் ஓய்வு பெற்றிருக்க வேண்டும். ஆனால் அவருக்கு அதில் தளர்வு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## ஈரான், வெனிசுலாவை அழித்தோம்: டிரம்ப்!




வாஷிங்டன், ஜூலை. 05–

அமெரிக்காவின் 250–வது சுதந்திர நாள் கொண்டாட்டம் வாஷிங்டனில் உள்ள நேஷனல் மாலில் கொண்டாட திட்டமிடப்பட்டது. இந்த நிகழ்வின் போது வாஷிங்டனில் ஏற்பட்ட தீவிர புயல் அபாயம் காரணமாக டிரம்ப்பின் திட்டமிடப்பட்ட உரை மற்றும் அணிவகுப்புகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு பார்வையாளர்கள் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர். இந்த நிலையில், நிகழ்வு அரங்கில் கூடியிருந்த மக்கள் வெளியேற்றப்பட்ட போதிலும் தனது உரையை ஆற்றுவேன் என்று தனது வளைதள பக்கத்தில் டிரம்ப் தெரிவித்திருந்தார்.

அதன்படி அவர் ஆற்றிய உரையில் பேசியதாவது:

உலகின் மிக வலிமையான மற்றும் சக்திவாய்ந்த நாடாக அமெரிக்கா உருவானது வரலாற்றில் தற்செயலான நிகழ்வு அல்ல. எனது முதல் பதவிக்காலத்தில் ராணுவத்தை நாங்கள் புதுப்பித்தோம். அதனை மூன்றாவது பதவிக்காலத்தில்தான் சிறிதளவு பயன்படுத்தினோம்.

அதைப்பற்றி முழுவதுமாகக் கூறி சர்ச்சையைக் கிளப்ப நான் விரும்பவில்லை. ஆனால் நாங்கள் அதைப் பயன்படுத்தினோம், மகத்தான வெற்றியையும் பெற்றோம். வெனிசுவேலா மற்றும் ஈரானையோ நீங்கள் பாருங்கள். நாங்கள் அதை முழுவதுமாக அழித்து விட்டோம். அவர்களின் ராணுவத்தையே முற்றிலுமாக துடைத்தெறிந்து விட்டோம் என்று டிரம்ப் உரையாற்றினார்.


## பழமுதிர்சோலை முருகன் கோவில் கோலாகல கும்பாபிஷேகம்: 'வெற்றிவேல்... வீரவேல்' முழக்கத்தில் பக்தர்கள் பரவசம்!



மதுரை, ஜூலை. 05–

மதுரை அருகே உள்ள அறுபடை வீடுகளில் ஒன்றான பழமுதிர்சோலை முருகன் கோவிலில் இன்று மகா கும்பாபிஷேகம் கோலாகலமாக நடைபெற்றது. அதிகாலை யாகசாலை பூஜைகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, கோபுர கலசங்களில் புனிதநீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. அப்போது ஆயிரக்கணக்கான பக்தர்கள் "வெற்றிவேல்... வீரவேல்..." என பக்தி முழக்கம் எழுப்பியதால் கோவில் வளாகமே பக்தி பரவசத்தில் மூழ்கியது. விழாவையொட்டி சிறப்பு அபிஷேகம், தீபாராதனை மற்றும் அன்னதானம் நடைபெற்றன. பக்தர்களின் வருகையை முன்னிட்டு விரிவான பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. கும்பாபிஷேகத்தை முன்னிட்டு பல நாட்களாக நடைபெற்ற யாகசாலை பூஜைகள் இன்று நிறைவடைந்தன.

## படகு கவிழ்ந்து பள்ளி மாணவர்கள் 20 பேர் பலி!



கின்ஷாசா, ஜூலை. 05–

மத்திய கிழக்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள நாடு காங்கோ.

இந்நாட்டில் படகு போக்குவரத்து அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது. அதேவேளை, உரிய பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்படததால் அவ்வப்போது படகு விபத்துகள் ஏற்பட்டு உயிரிழப்பு சம்பவங்களும் அரங்கேறி வருகிறது. இந்நிலையில், அந்நாட்டின் கசாய் மாகாணத்தில் உள்ள ஆற்றில் கடந்த வெள்ளிக்கிழமை படகு சென்றுகொண்டிருந்தது. அந்த படகில் பள்ளி மாணவர்கள் உள்பட 200க்கும் மேற்பட்டோர் பயணம் மேற்கொண்டனர்.

ஆற்றின் மையப்பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது திடீரென கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் படகில் இருந்த அனைவரும் ஆற்றில் அடித்து செல்லப்பட்டனர். இந்த சம்பவத்தில் 80 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். ஆனாலும், இந்த சம்பவத்தில் படகில் பயணித்த பள்ளி மாணவர்கள் 20 பேர் உயிரிழந்தனர். மேலும், ஆற்றில் அடித்து செல்லப்பட்ட எஞ்சிய 100 பேரை தேடும் பணியில் மீட்புக்குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

# தலையங்கம்

மதுரை மணி
ஞாயிற்றுக்கிழமை 05.07.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆனி மாதம் 21-ம் தேதி

## வெற்றி பெற்ற கட்சிக்கு மாறும் நிர்வாகிகள்: பதவி சுகம் அனுபவித்த பின் கட்சி தாவுவது சரியா?




தேர்தலில் ஒரு கட்சியின் கொள்கை, தலைவர் மற்றும் தொண்டர்களின் உழைப்பை முன்னிறுத்தி பதவிக்கு வந்த சில நிர்வாகிகள், பின்னர் வெற்றி பெற்ற மாற்றுக் கட்சியில் இணைவது அரசியலில் தொடர்ந்து காணப்படும் நிகழ்வாக உள்ளது. இந்திய அரசியலில் கட்சி தாவல் புதியது அல்ல; இது பல ஆண்டுகளாக விவாதத்திற்குரிய விஷயமாக இருந்து வருகிறது.

ஒரு தரப்பு, அரசியலில் கருத்து வேறுபாடு, கொள்கை மாற்றம் அல்லது மக்களின் நலனுக்காக கட்சி மாறுவது தனிநபரின் ஜனநாயக உரிமை என வாதிடுகிறது.

மற்றொரு தரப்பு, பதவி, அதிகாரம் மற்றும் அனைத்து சலுகைகளையும் அனுபவித்த பிறகே கட்சி மாறுவது மக்களின் வாக்கு நம்பிக்கைக்கு எதிரான செயல் எனக் கூறுகிறது. குறிப்பாக தேர்தலில் ஒரு கட்சியின் பெயரில் வெற்றி பெற்று, பின்னர் அதிகாரத்தில் இருக்கும் கட்சியில் இணைவது அரசியல் நெறிமுறைகள் குறித்து கேள்விகளை எழுப்புகிறது.

அரசியல் கட்சி மாறுவது சட்டப்படி சில சூழல்களில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும், அது எந்த காரணத்திற்காக நடைபெறுகிறது என்பதே மக்களின் மதிப்பீட்டில் முக்கிய மானதாக உள்ளது. பதவி அல்லது அதிகாரத்திற்காகவா, அல்லது உண்மையான கொள்கை காரணங்களுக்காகவா என்ற கேள்விக்கான பதிலே பொதுமக்களின் நம்பிக்கையை தீர்மானிக்கிறது. இறுதியில், தீர்ப்பை வழங்குவது மக்கள் மட்டுமே. தேர்தலில் அவர்கள் அளிக்கும் வாக்கே, கட்சி தாவலை ஏற்கிறார்களா அல்லது நிராகரிக்கிறார்களா என்பதை முடிவு செய்கிறது.

## திருப்பதி ஏழுமலையான் கோயிலில் ஜூன் மாதத்தில் 1.27 கோடி லட்டுகள் விற்பனை!




திருப்பதி, ஜூலை. 05–
திருப்பதி ஏழுமலையான் கோயிலில் ஜூன் மாதத்தில் 1.27 கோடி லட்டுகள் விற்பனை செய்யபப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ஜூன் மாதத்தை விட இந்த ஆண்டு 7,59,452 லட்டுகள் கூடுதல் விற்பனை செய்யபப்பட்டுள்ளது.

## பயறு சாகுபடி, இயற்கை வேளாண்மைக்கு விழிப்புணர்வு!



ராமநாதபுரம், ஜூலை. 05–
ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் வட்டாரத்தில், ஆத்மா திட்டத்தின் கீழ் “கிசான் கோத்தீஸ்” வயல் தின விழாநடைபெற்றது. இதில் நெல் சாகுபடிக்கு மாற்றாக பயறு சாகுபடி, இயற்கை வேளாண்மை, மண்நீர் பரிசோதனை, உயிர் உரங்களின் பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும் தென்னை சாகுபடி, விதை நேர்த்தி, மண்புழு உரம் தயாரித்தல் உள்ளிட்ட தொழில்நுட்பங்கள் செய்முறை விளக்கத்துடன் எடுத்துரைக்கப்பட்டன. அரசு மானியத் திட்டங்களை பயன்படுத்தி அறிவியல் முறையில் சாகுபடி செய்து மகசூலையும் வருமானத்தையும் உயர்த்துமாறு விவசாயிகளுக்கு, வேளாண்மைத் துறையினர் அறிவுறுத்தினர்.

## காவிரி கூட்டுக்குடிநீர் விநியோகம் நிறுத்தம்!




ராமநாதபுரம், ஜூலை. 05–
காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் பிரதான குழாயில் ஏற்பட்ட உடைப்பை சீரமைக்கும் பணிகள் நடைபெறுவதால், ஜூலை 6 மற்றும் 7 (2026) ஆகிய இரு நாட்களில் இராமநாதபுரம் மாவட்டத்தில் காவிரி கூட்டுக் குடிநீர் விநியோகம் நிறுத்தப்படுகிறது. தேவையான குடிநீரை முன்கூட்டியே சேமித்து வைத்துக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் மா.சிவகுரு பிரபாகரன் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

## குதிரை பேரத்தை உருவாக்கியதே திமுக தான்; செங்கோட்டையன்!



ஈரோடு, ஜூலை. 05–
குதிரை பேரத்தை உருவாக்கியதே திமுக தான்; எங்களுக்கு அந்த அவசியமே இல்லை என தவெக மீது குதிரை பேர குற்றச்சாட்டை வைத்து அடுத்தடுத்து கவர்னர் சந்தித்த பாஜக, திமுக, அதிமுகவுக்கு அமைச்சர் செங்கோட்டையன் பதிலடி கொடுத்தார்.

ஈரோட்டில் நிருபர்களிடம் செங்கோட்டையன் கூறியதாவது: என்னை பொறுத்தவரை இந்த குதிரை பேரத்தை உருவாக்கியதே திமுகதான். ஜெயலலிதா இருந்த காலத்தில், நாங்கள் எதிர்க்கட்சியாக இருக்கிற போது, மதிமுகவை சேர்ந்த ராமகிருஷ்ணனை ராஜினாமா செய்ய வைத்து திமுகவில் இணைத்தனர். பிறகு மீண்டும் திமுகவில் போட்டியிடுவதற்கு வாய்ப்பை அளித்தனர்.

அனிதா ராதாகிருஷ்ணன் அதிமுகவில் இருந்தவர். அவரையும் அதை தான் செய்தனர். குதிரை பேரத்தை முதல் முதலில் உருவாக்கிய நிலை திமுகவுக்கு தான் இருக்கிறது. எங்களுக்கு அந்த நிலை இல்லை. குதிரை பேரம் என்பது எனக்கு புரியவில்லை. எல்லோரும் குதிரை பேரம் என்கிறார்கள். ஆகவே அதற்கு வேறு பொருள் தமிழகத்திற்கு தேடி கொண்டு இருக்கிறோம்.

எப்படி அதற்கு பதில் சொல்ல வேண்டும் என்பதற்கு தேடிக்கொண்டு இருக்கிறோம், அது கிடைத்தால் அதற்கான பதில் சொல்லப்படும். குதிரை பேரம் பேச வேண்டிய நிலை இல்லை. நாங்கள் இன்றைக்கு வலிமையாக ஆட்சி அமைத்து இருக்கிறோம், எங்கள் கூட்டணி வலிமையான ஆதரவை தந்து இருக்கிறது. இன்றைக்கு அமைச்சரவையில் காங்கிரஸ், விசிக முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளுக்கும் இடம் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

கம்யூனிஸ்ட் கட்சிகள் நாங்கள் வெளியில் இருந்து ஆதரவு தருகிறோம் என்று சொன்னார்கள். குதிரை பேரத்திற்கே வேலை இல்லை. வலிமையான, நேர்மையான ஆட்சி, தமிழ் மக்கள் அனைவரும் விரும்பிய ஆட்சி நடக்கிறது. 96 பேர் கொண்டு மைனாரிட்டி ஆட்சி நடத்தியவர்களுக்கு தான் குதிரை பேரம் தேவை. எங்களுக்கு தேவை இல்லை. இவ்வாறு செங்கோட்டையன் கூறினார்.

## விசாரணைக்கு ஆஜராகாமல் அவகாசம் கேட்பது ஏன்? கோர்ட் கேள்வி!



புதுச்சேரி, ஜூலை. 05–
‘சொத்து பிரச்னையில், அண்ணன் – அண்ணியை வீடு புகுந்து தாக்கி, கொலை மிரட்டல் விடுத்த வழக்கில், தமிழக நிதி அமைச்சர், புதுச்சேரி கோர்ட்டில் வரும் 10ம் தேதி கட்டாயம் நேரில் ஆஜராக வேண்டும்’ என, நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

தமிழக நிதி அமைச்சர் மரிய வில்சன், அவரது தந்தை நெஸ்தோர் ஆகியோர் சொத்து தகராறில், 2022 ஆக., 8ல் புதுச்சேரி, எழில் நகரில் வசிக்கும் அவரது அண்ணன் மரியகுலோத், அண்ணி கெரோலின் ஆகியோரை ஆபாசமாக திட்டி, உருட்டுக் கட்டையால் தாக்கியதாக, கெரோலின் லாஸ்பேட்டை போலீசில் புகார் அளித்தார்.

அந்த புகாரில், ‘என் ஆடைகளை இழுத்து மானபங்கப்படுத்தி, நாங்கள் நடத்தி வரும் செயின்ட் ஆண்டனி பள்ளி நிர்வாகத்தில் தலையிட்டால், மிஷன் வீதியில் நீங்கள் நடத்தி வரும் ரெஸ்டாரண்டை அடித்து நொறுக்கி, குடும்பத்தோடு அனைவரையும் கொலை செய்துவிடுவோம் என, மரிய வில்சன் மிரட்டினார்’ என, தெரிவித்திருந்தார்.

**ஜாமின்**

இதையடுத்து, வீட்டிற்குள் அத்துமீறி நுழைதல், தாக்குதல், சொத்திற்கு சேதம் விளைவித்தல், ஆபத்தான ஆயுதத்தால் காயம் ஏற்படுத்துதல், பெண்ணை மானபங்கப்படுத்துதல், கொலை மிரட்டல் மற்றும் கூட்டு சதி உள்ளிட்ட பிரிவுகளில் வழக்கு பதிந்து, மரிய வில்சன், நெஸ்தோர் ஆகியோரை போலீசார் கைது செய்து, ஜாமினில் விடுவித்தனர்.

வழக்கு விசாரணை புதுச்சேரி முதலாவது குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. விசாரணைக்கு மரிய வில்சன் ஆஜராகவில்லை. குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், நேரில் பெற்றுக்கொள்வதற்காக ஜூலை 4ம் தேதி, நீதிமன்றத்தில் கட்டாயம் நேரில் ஆஜராக வேண்டும் என, மாஜிஸ்திரேட் சேரலாதன் நேற்று முன்தினம் உத்தவிட்டிருந்தார்.

நேற்று காலை, 10:30 மணிக்கு, மாஜிஸ்திரேட் சேரலாதன் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு வந்த போது, மரிய வில்சன், நெஸ்தோர் ஆஜராகவில்லை. அவர்கள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், ‘மரிய வில்சன் தமிழக நிதியமைச்சராக உள்ளதால், விரைவில் தாக்கல் செய்யப்படவுள்ள பட்ஜெட் தயாரிப்பு தொடர்பாக அதிகாரிகளுடன் ஆலோசனையில் உள்ளார். வேலை பளு காரணமாக விசாரணைக்கு ஆஜராக முடியவில்லை. இரண்டு வாரம் கால அவகாசம் தேவை’ என்றார்.

**கட்டாயம்**

அப்போது, குறுக்கிட்ட மாஜிஸ்திரேட், ‘பலமுறை சம்மன் வழங்கியும் ஆஜராகாமல், அவகாசம் கேட்பது ஏன்? சட்டசபை கூட்டத்தொடரை காரணம் காட்டி ஏற்கனவே, 15 நாள் அவகாசம் கேட்டீர்கள். ஆனால், சட்டசபை மூன்று நாட்கள் மட்டுமே நடந்ததை தொலைக்காட்சி செய்திகள் மூலம் தெரிந்து கொண்டேன்.

‘அலுவலக ரீதியாக சிரமம் கூடாது என்பதற்காகத்தான் விடுமுறை நாளான ஆஜராக உத்தரவிட்டேன். ‘இன்றும், ஆஜராகாமல் மேலும் 15 நாள் அவகாசம் கேட்கறீர்கள். இதற்கு, அவகாசம் வழங்கினால், மீண்டும் அடுத்த கட்டமாக சட்டசபை கூடும் தேதியை காரணமாக குறிப்பிட்டு, மேலும் அவகாசம் கேட்பீர்கள். வரும் 6 அல்லது 7ம் தேதி ஆஜராக முடியுமா’ என, கேட்டார்.

அதற்கு, பதில் அளித்த வழக்கறிஞர், ‘அன்றும் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்த வேண்டியிருக்கும்’ என்றார். மாஜிஸ்திரேட், வரும் 10ம் தேதி கட்டாயம் கோர்ட்டில் ஆஜராகி, குற்றப்பத்திரிகை நகல் மற்றும் வழக்கு ஆவணங்களை பெற்றுக்கொள்ள வேண்டும் என உத்தரவிட்டு, விசாரணையை, வரும் 10ம் தேதிக்கு ஒத்தி வைத்தார்.

## தமிழை நெஞ்சில் சுமந்து வாழும் பண்பு தொடர வேண்டும்: அண்ணாமலை!



சென்னை, ஜூலை. 05–
உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும், தமிழ் மொழியை நெஞ்சில் சுமந்து வாழும் இந்தப் பண்பு என்றும் தொடர வேண்டும் என ‘வீ தி லீடர்ஸ்’ அமைப்பின் தலைவர் அண்ணாமலை வலியுறுத்தி உள்ளார்.

அவரது அறிக்கை: வட அமெரிக்க தமிழ்ச்சங்கப் பேரவையும் (பெட்னா), நியூஜெர்சி தமிழ்ப் பேரவையும் இணைந்து நடத்திய 39வது தமிழ் விழாவில் பங்கேற்று, தமிழ் வம்சாவளியினருடன் நேரில் சந்தித்து உரையாடியது, மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. எல்லைகளைக் கடந்து, தமிழின் மீதான அவர்களின் அன்பும், பற்றும், அர்ப்பணிப்பும் பெருமைக்குரியது. தமிழ் மொழி, பண்பாடு, அடையாளம் ஆகியவற்றை அடுத்த தலைமுறைக்கும் உயிர்ப்புடன் கொண்டு செல்லும் இது போன்ற முயற்சிகள், உண்மையிலேயே பாராட்டத்தக்கவை. உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும், தமிழ் மொழியை நெஞ்சில் சுமந்து வாழும் இந்தப் பண்பு என்றும் தொடர வேண்டும்.

அன்போடும், உற்சாகத்தோடும் என்னை வரவேற்று, இனிய நினைவுகளைப் பரிசளித்த வட அமெரிக்க தமிழ்ச்சங்கப் பேரவைக்கும், நியூஜெர்சி தமிழ்ப் பேரவைக்கும், விழாவில் பங்கேற்ற ஒவ்வொரு தமிழ்ச் சொந்தத்துக்கும், என் மனமார்ந்த நன்றிகள். தமிழால் இணைவோம், தமிழால் உயர்வோம். இவ்வாறு அண்ணாமலை கூறியுள்ளார்.

## தமிழ்நாடு முழுவதும் 1,67,743 பேர் எழுதும் ஆசிரியர் தகுதித் தேர்வு!



சென்னை, ஜூலை. 05–
தமிழ்நாட்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர் பணிக்கான ஆசிரியர் தகுதித் தேர்வு நேற்றும் இன்றும் நடைபெறுகிறது. இரண்டாம் நாளான தாள் இரண்டிற்கான தேர்வு நடைபெறுகிறது. இந்நிலையில் 1,67,743 பேர் இத்தேர்வு எழுதுகின்றனர். இத்தேர்வு தமிழ்நாடு முழுவதும் 613 தேர்வு மையங்களில் நடைபெறுகின்றன.

இத்தேர்வை எழுத இன்று காலை முதலே நீண்ட வரிசையில் நின்று, மிகுந்த உற்சாகத்துடனும் எதிர்பார்ப்புடனும் தேர்வர்கள் தேர்வு மையங்களுக்குள் நுழைந்தனர். தேர்வர்கள் காலை 8.30 மணி முதல் 9.30 மணிக்குள் தத்தமது தேர்வு மையங்களுக்கு வருகை தர வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருந்தது. 9:30 மணிக்கு மேல் வந்தவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

காலை 10:00 மணிக்குத் தொடங்கிய இத்தேர்வு பிற்பகல் 1:00 மணி வரை நடைபெறும். மாற்றுத் திறனாளி தேர்வர்களுக்கு கூடுதலாக 1 மணி நேரம் வழங்கப்படும். மொபைல் போன்கள், ஸ்மார்ட் வாட்ச் போன்ற மின்னணு சாதனங்களை தேர்வுகள் எடுத்து செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், தேர்வு அறைக்குள் பெல்ட், ஷூ மற்றும் ஹை ஹீல்ஸ் அணிந்து வரவும் அனுமதி வழங்கப்படவில்லை.

நேற்று நடைபெற்ற முதல் தாள் தேர்வு எதிர்பார்த்ததை விட சற்று கடினமாக இருந்ததாக தேர்வர்கள் கூறினார். இந்நிலையில் இன்றைய இரண்டாம் தாள் தேர்வின் வினாக்கள் குறித்த பரபரப்பு தேர்வர்களிடையே பதற்றத்தை நிலவியது.


## பாஸ்போர்ட் தரவரிசை: 125-வது இடம்பிடித்த இந்தியா!



சென்னை, ஜூலை. 05–
நடப்பு ஆண்டுக்கான உலகளாவிய பாஸ்போர்ட் தரவரிசையில் இந்தியாவுக்கு 125–வது இடம் கிடைத்துள்ளது.

ஆண்டு தோறும் உலகளாவிய பாஸ்போர்ட் தரவரிசை பட்டியல் வெளியிடப்படுகிறது. சர்வதேச பயணங்களுக்கான எளிமை, பிற நாடுகளில் வசிப்பதற்கும், பணிபுரிவதற்கும் மற்றும் முதலீடு செய்வதற்கும் நாடுகளின் பாஸ்போர்ட் வழங்கும் நன்மைகள் அடிப்படையில் தரவரிசைப்படுத்துகிறது.

இந்நிலையில், 2026–ம் ஆண்டுக்கான உலகளாவிய பாஸ்போர்ட் குறியீடு வெளியிடப்பட்டுள்ளது. இதில் 197 நாடுகளில் இந்தியா 125–வது இடத்தைப் பிடித்துள்ளது.



## சிவனின் அம்சம் கொண்ட 5 ராசிகள்!




பொதுவரி ஆன்மீகத்தில் சிவகுணங்கள் என சொல்லப்படுவது அமைதி, கோபம், கருணை, கம்பீரம், தலைமைத்துவம், ஆழ்ந்த ஞானம், தர்ம சிந்தனை, மற்றவர்கள் எளிதில் புரிந்து கொள்ள முடியாத ஆழமான சிந்தனைகள், செயல்பாடுகள் என்பவை தான். இந்த அனைத்து குணங்களும் சில ராசிக்காரர்களிடம் கலந்திருக்கும் என ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது. சாதாரண மனிதர்களால் அவ்வளவு எளிதில் புரிந்து கொள்ள முடியாத விசித்திர பிறவிகளாக இருப்பவர்களுக்கு சிவனின் அம்சம் இருக்கும் என சொல்லப்படுகிறது. கோபத்தில் ருத்ரனாகவும், கருணையில் போலாநாதனாகவும் விளங்கும் ஈசனின் அம்சம் பொருந்திய அந்த 5 ராசிகள் யார், அவர்களின் ரகசிய பலன்கள் என்ன என்பதை காண்போம்.

**மேஷ ராசி (தலைமைப் பண்பும் ருத்ர வேகமும்)**

மேஷ ராசியின் அதிபதி செவ்வாய் என்பதால், இவர்களிடம் சிவபெருமானின் வீரமும், அநீதியைக் கண்டு பொங்கும் குணமும் இயல்பாகவே இருக்கும். எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ளும் துணிச்சல் மற்றும் மூன்றாவது கண் போன்ற கூர்மையான புத்திசாலித்தனம் இருக்கும். இவர்கள் தங்களின் கோபத்தை ஆக்கப்பூர்வமான காரியங்களுக்குப் பயன்படுத்தினால், இவர்களை யாராலும் வெல்ல முடியாது.

**சிம்ம ராசி (ஆளுமையும் கம்பீரமும்)**

சூரியனை அதிபதியாகக் கொண்ட சிம்ம ராசிக்காரர்கள், ஈசனின் பிரபஞ்சக் கட்டுப்பாடு மற்றும் கம்பீரமான தோற்றத்திற்கு இணையானவர்கள். இவர்களின் சொல்லுக்குப் பிறர் கட்டுப்படுவார்கள். பிறரை வழிநடத்தும் காந்த சக்தி இவர்களிடம் அதிகம். அதிகாரத் தோரணையைக் குறைத்து, சிவனைப் போல எளியவர்களிடம் கருணை காட்டினால் இவர்களின் புகழ் ஓங்கும்.

**விருச்சிக ராசி (ஆழ்ந்த ஞானமும் ரகசிய ஆற்றலும்)**

காலபுருஷ தத்துவப்படி எட்டாவது ராசியான விருச்சிகம், சிவபெருமானின் ஆக்கல் மற்றும் அழித்தல் (மறுபிறவி) தத்துவத்தைக் குறிக்கிறது. இவர்களைப் புரிந்து கொள்வது கடினம்; எதையும் தாங்கும் மனவலிமையும், ஆன்மீக உள்ளுணர்வும் இவர்களிடம் ஒளிந்திருக்கும். ஆனால் பழிவாங்கும் எண்ணத்தை கைவிட்டு, தியானம் மற்றும் வழிபாடுகளில் கவனம் செலுத்தினால் பேராற்றல் கிட்டும்.


**தனுசு ராசி (தர்மமும் நேர்மையும்)**

குருவின் ஆதிக்கத்தில் பிறந்த தனுசு ராசிக்காரர்கள், தட்சிணாமூர்த்தி வடிவமாக விளங்கும் ஈசனின் ஞானப் பண்பைப் பெற்றவர்கள். நியாயத்தின் பக்கம் நிற்பது, பிறருக்கு நல்வழி காட்டுவது மற்றும் உலக பந்தங்களை எளிதில் கடந்து செல்லும் பக்குவம் இவர்களிடம் இயல்பாக இருக்கும். இவர்களின் நேர்மையான வார்த்தைகளே இவர்களின் ஆயுதம். அதை மற்றவர்களின் நன்மைக்காக மட்டுமே பயன்படுத்துங்கள்.

**கும்ப ராசி (வைராக்கியமும் தியாகமும்)**

சனியின் ராசியான கும்பம், உலக நன்மைகாக ஆலகால விஷத்தை அருந்திய நீலகண்டனின் தியாக மனப்பான்மையைக் கொண்டது.பொதுநலன் விரும்புவது, தனிமையை விரும்புவது மற்றும் எவ்வளவு துன்பம் வந்தாலும் கொள்கையிலிருந்து மாறாத வைராக்கியம் இவர்களிடம் இருக்கும். உலகிற்கு நன்மை செய்ய நினைக்கும் நீங்கள், உங்களின் சுய முன்னேற்றத்திலும் சற்றே கவனம் செலுத்துவது அவசியம்.

ஆன்மீகக் குறிப்பு: சிவபெருமானின் அம்சம் பெற்ற இந்த ராசிக்காரர்கள், திங்கட்கிழமைகளில் சிவபெருமானுக்கு வில்வ இலைகளால் அர்ச்சனை செய்து வர, வாழ்வில் சகல ஐஸ்வர்யங்களும் கைகூடும்.



## சினிமா துளிகள்..!

## ஜூலை 5 இன்றைய சினிமா செய்திகள்!

**தமிழ்**

நடிகர்கள், இயக்குநர்கள் பங்கேற்ற புதிய படங்களின் படப்பிடிப்பு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

பல தமிழ் படங்களின் OTT வெளியீட்டு தேதிகள் விரைவில் அறிவிக்கப்பட உள்ளன.

**மலையாளம்**

நடிகர் சுரேஷ் கோபி நடிக்கும் ‘ஒட்டக்கொம்பன்’ படத்திற்கு இசையமைப்பாளராக தமன் எஸ்இணைந்துள்ளார். இது மலையாள சினிமாவில் அவரின் முதல் படம்.

நடிகர் நஸ்லென் அடுத்ததாக ‘கும்பளங்கி நைட்ஸ்’ இயக்குநர் மது சி. நாராயணன் இயக்கும் புதிய படத்தில் நடிக்கிறார். படப்பிடிப்பு இந்த மாதம் தொடங்கும் என தகவல்.

**ஹிந்தி**

ஆலியா பட் நடித்த உளவுத்துறை அதிரடி திரைப்படமான ‘Alpha’ ஜூலை 10–ம் தேதி உலகம் முழுவதும் வெளியாக தயாராக உள்ளது. படத்தின் இறுதிக்கட்ட விளம்பரப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**தெலுங்கு**

ராம் சரண் ஜான்வி கபூர் நடித்த ‘பெட்டி (Peddi)’ திரைப்படத்தின் OTT வெளியீடு விரைவில் அறிவிக்கப்பட உள்ளது. திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடிய படத்திற்கு ரசிகர்கள் நல்ல வரவேற்பு அளித்துள்ளனர்.




ஆண்களில் டெஸ்டோஸ்டிரோன் ஹார்மோன் குறையும்போது பாலியல் விருப்பம் குறைதல், எப்போதும் சோர்வாக இருப்பது, தூக்கமின்மை, மனஅழுத்தம், எரிச்சல், விறைப்புத்தன்மை குறைபாடு, தசை வலிமை குறைதல் போன்ற அறிகுறிகள் தோன்றலாம். இருப்பினும், இவை வேறு உடல்நலப் பிரச்சினைகளாலும் ஏற்படக்கூடும். அறிகுறிகள் நீடித்தால் தானாக மருந்து எடுத்துக்கொள்ளாமல், மருத்துவரை அணுகி ரத்தப் பரிசோதனை செய்து உரிய சிகிச்சை பெறுவது அவசியம்.

உடலில் தோன்றும் சிறிய அறிகுறிகளை அலட்சியப்படுத்துவது, பின்னர் பெரிய உடல்நலப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கலாம். குறிப்பாக ஆண்களின் உடலில் முக்கிய ஹார்மோனான டெஸ்டோஸ்டிரோன் (Testosterone) அளவு குறையத் தொடங்கினால், ஆரம்பத்திலேயே சில எச்சரிக்கை அறிகுறிகள் தென்படும். இந்த ஹார்மோன் பாலியல் ஆரோக்கியம் மட்டுமல்லாமல், தசை வளர்ச்சி, எலும்புகளின் உறுதி, உடல் வலிமை, விந்தணு உற்பத்தி மற்றும் ஒட்டுமொத்த உடல் செயல்பாடுகளுக்கும் முக்கிய பங்கு வகிக்கிறது.

டெஸ்டோஸ்டிரோன் குறைவதற்கான முக்கிய அறிகுறிகளில் பாலியல் விருப்பம் குறைதல், விறைப்புத்தன்மை பிரச்சினை, எப்போதும் சோர்வாக இருப்பது, சிறிய வேலைகளுக்குக் கூட அதிக களைப்பு ஏற்படுவது, தூக்கமின்மை, காலை எழுந்த பிறகும் புத்துணர்ச்சி இல்லாமை, எரிச்சல், மனச்சோர்வு, பதட்டம், கவனக்குறைவுமற்றும் உற்சாகமின்மை ஆகியவை அடங்கும். மேலும், நீண்ட காலமாக இந்த ஹார்மோன் குறைவாக இருந்தால் தசை வலிமை குறைதல், உடல் கொழுப்பு அதிகரித்தல், எலும்புகளின் அடர்த்தி குறைதல் மற்றும் விந்தணு தரம் அல்லது எண்ணிக்கையில் மாற்றம் போன்ற பிரச்சினைகளும் ஏற்படக்கூடும்.

ஆனால், இந்த அறிகுறிகள் அனைத்தும் டெஸ்டோஸ்டிரோன் குறைபாட்டால் மட்டுமே ஏற்படும் என்று கருதக் கூடாது. நீரிழிவு, உயர் ரத்த அழுத்தம், தைராய்டு கோளாறு, சில மருந்துகளின் பக்கவிளைவுகள், ரத்த நாள பாதிப்புகள், மனஅழுத்தம் மற்றும் தூக்கமின்மை போன்ற காரணங்களாலும் இதே அறிகுறிகள் தோன்றலாம்.

எனவே, மேற்கண்ட அறிகுறிகள் நீண்ட நாட்களாக தொடர்ந்து இருந்தால், தானாக ஹார்மோன் மருந்துகள் அல்லது ஊசிகளை பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். அதற்கு பதிலாக, தகுதியான மருத்துவரை அணுகி ரத்தப் பரிசோதனை மூலம் டெஸ்டோஸ்டிரோன் அளவை பரிசோதித்து, அதன் அடிப்படையில் உரிய சிகிச்சை பெறுவது மிகவும் அவசியம். ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை மேற்கொண்டால், இந்தப் பிரச்சினைகளை திறம்பட கட்டுப்படுத்தி, ஆரோக்கியமான வாழ்க்கையை தொடர முடியும்.

# திருவள்ளூர் தொழிற்சாலையில் அமோனியாவை அகற்றும் பணி 2 வது நாளாக தொடக்கம்!

திருவள்ளூர், ஜூலை. 05–

திருவள்ளூர் மாவட்டம் கன்னிகைப்பேர் கிராமத்தில் புனித பீட்டர் பால்' என்கிற கடல் உணவுப்பொருட்களை பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலை செயல்பட்டு வந்தது. இங்கு கடந்த மாதம் 21–ந்தேதி அமோனியா வாயு கசிவு ஏற்பட்டது. இந்த விபத்தில் பாதிக்கப்பட்ட வடமாநில தொழிலாளர்கள் பலர் ஆஸ்பத்திரி களில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்தது. தற்போது 14 பேர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.



இதற்கிடையில், தொழிற்சாலையில் பணியாற்றிய ஒடிசா, அசாம், கேரளா, மேற்கு வங்கம் உள்ளிட்ட மாநிலங்களை சேர்ந்த தொழிலாளர்கள் அனைவரும் பாதுகாப்பாக அவர்களது சொந்த மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

பணிகள் நடைபெறும் பகுதி 300 மீட்டர் சுற்றளவில் தடை செய்யப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டது. மேலும், தொழிற்சாலையை சுற்றிய 500 மீட்டர் சுற்றளவிற்குள் பொதுமக்கள் யாரும் அனுமதிக்கப்படவில்லை. பாதுகாப்பு கருதி பணிகள் 3 மண்டலங்களாக (ஜோன் பிரிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டன. முதல் மண்டலத்தில் 16 தொழில்நுட்ப வல்லுநர்கள் அமோனியா வாயுவை டேங்கர் லாரிக்கு மாற்றும் பணியில் ஈடுபட்டனர். 2–வது மண்டலத்தில் தேசிய பேரிடர் மீட்பு படை வீரர்கள் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்பு படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். 3–வது மண்டலத்தில் மருத்துவ குழுவினர் மற்றும் போலீசார் கண்காணிப்பு பணியில் இருந்தனர்.

நேற்று மாலை வரை 3 டேங்குகளில் இருந்த சுமார் 2 டன் அமோனியா வாயு முழுமையாக டேங்கர் லாரிக்கு மாற்றப்பட்டது. தொழிற்சாலையில் உள்ள டேங்குகளில் இருந்து தொழிற்சாலையின் பல்வேறு பகுதிகளுக்கு செல்லும் குழாய்கள், வால்வுகள் உள்ளிட்டவற்றில் எஞ்சியுள்ள அமோனியா வாயுவை சேகரித்து மீண்டும் டேங்கிற்கு கொண்டு வந்து, பின்னர் லாரிக்கு மாற்றும் பணி இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணிக்கு தொடங்கியது. இந்த பணி மாலைக்குள் நிறைவடையும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தொழிற்சாலையில் மீதம் உள்ள 2 டன் அமோனியாவை பாதுகாப்பாக அகற்றும் பணி 2வது நாளாக தொடங்கி நடைபெற்று வருகிறது.

இந்த பணிகள் காரணமாக ஜனப்பன்சத்திரம் கூட்டுச்சாலையில் இருந்து பெரிய பாளையம் நோக்கி செல்லும் வாகனங்கள் மாற்றுப்பாதையில் இயக்கப்பட்டுள்ளன. இன்றும் 2–வது நாளாக இதே போக்குவரத்து மாற்றம் அமலில் உள்ளது.

# வேலை வாய்ப்பு
## வங்கி ஆஃப் பரோடா வேலைவாய்ப்பு 2026

நிறுவனம்: வங்கி ஆஃப் பரோடா (Bank of Baroda)
பணி: மேலாளர், மூத்த மேலாளர், தலைமை மேலாளர் (Credit Analyst / C & IC Relationship)
காலிப்பணியிடங்கள்: 86
பணி வகை: மத்திய அரசு நிரந்தர வேலை
பணியிடம்: இந்தியா முழுவதும்
கல்வித் தகுதி: முதுநிலை பட்டம்/டிப்ளமோ (நிதி), CA, CMA, CS, CFA
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்ப தொடக்கம்: 16.06.2026
கடைசி தேதி: 06.07.2026
தேர்வு முறை: வங்கி அறிவிப்பின்படி (Shortlisting / Interview உள்ளிட்ட நடைமுறைகள்)
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://bankofbaroda.bank.in/

**முக்கிய குறிப்பு:**

தகுதியும் அனுபவமும் உள்ளவர்கள் 2026 ஜூலை 6–க்குள் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். இந்திய முழுவதும் பணியமர்த்தப்படவுள்ள இந்த நிரந்தர மத்திய அரசு வங்கி வேலைவாய்ப்பிற்கு CA, CMA, CS, CFA அல்லது நிதி தொடர்பான முதுநிலை தகுதி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

# ஒட்டன்சத்திரம் கிறிஸ்டியன் பாலிடெக்னிக் கல்லூரியில் திறன் மேம்பாட்டு பயிற்சி!

ஒட்டன்சத்திரம், ஜூலை. 05–

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் கிறிஸ்டியன் பாலிடெக்னிக் கல்லூரியில் சிட்டிசன் கன்ஸ்யூமர் அண்ட் சிவிக் ஆக்சன் குருப் சார்பாக மேற்கூரை சூரிய மின் சக்தி தொடர்பான திறன் மேம்பாட்டு பயிற்சி நடைபெற்றது.




இப்பயிற்சிக்கு வருகை தந்த அனைவரையும் கல்லூரியின் முதல்வர் என்.கே.திறன் கரன் வரவேற்று பேசினார். இதில் திண்டுக்கல் மாவட்ட நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு அசோசியேசன் தலைவர் எஸ்.எஸ்.கரேஷ்குமார் கலந்துகொண்டு பயிற்சியின் நோக்கம் குறித்து உரையாற்றினார். இதில் கல்லூரியின் துறை தலைவர் கே.எஸ்.மாரிமுத்து கலந்துகொண்டு பயிற்சியால் மாணவர்களுக்கு பயன்படும் விதம் பற்றியும் இதனால் மாணவர்களுக்கு எவ்வாறு வேலை வாய்ப்பு உருவாக்கப்படும் என்பது பற்றியும் தெளிவாக கூறினார்.

இப்பயிற்சியில் செல்கோ சோலார் லைட் பிரைவேட் லிமிடெட் தொழில்நுட்ப வல்லுநர் சதீஷ் கலந்துகொண்டு, சோலார் பேனல் இன்வெர்ட்டர் ஒயர் போன்றவைகள் எவ்வாறு இணைந்து சூரிய மின் சக்தியின் மூலம் மின்சாரம் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது என்பது பற்றி செய்முறை விளக்கம் அளித்தனர். இந்நிகழ்ச்சியின் இறுதியில் சிட்டிசன் கன்ஸ்யூமர் அண்ட் சிவிக் ஆக்சன் குருப் ஆராய்ச்சியாளர் பி.கிருபாகரன் மாணவர்களிடம் கேள்விகள் கேட்கப்பட்டு அதில் சிறப்பாக பதில் அளித்த மாணவர்களை தேர்வு செய்யப்பட்டனர். தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்கு இரண்டு நாள் பயிற்சி அளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும் வேலைவாய்ப்பு உருவாக்கப்படும் என்று கூறினார்.

முடிவில் திண்டுக்கல் மாவட்ட நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு அசோசியேசன் செயலாளர் எம்.வி. பாலசுப்பிரமணியன் நன்றி கூறினார். இப்பயிற்சியில் 50 மாணவர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

# போர்ச்சுகல் நாட்டில் பற்றியெரியும் காட்டுத்தீ!



லிஸ்பன், ஜூலை. 05–

போர்ச்சுகல் நாட்டின் வடக்கு பகுதியில் உள்ள விசேயு மாவட்டத்தில் இருக்கும் வனப்பகுதியில் கடந்த புதன்கிழமை இரவு எதிர்பாராத விதமாக காட்டுத்தீ ஏற்பட்டது. காற்றின் வேகம் காரணமாக இந்த தீ வேகமாக பரவி வருகிறது. இதுவரை சுமார் 10 ஆயிரம் ஏக்கர் வரையிலான வனப்பகுதி தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

இந்த காட்டுத்தீயால் இதுவரை 9 பேர் படுகாயமடைந்துள்ளனர். அதில் 2 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தீயை அணைக்கும் பணியில் சுமார் 1,000 தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் 300–க்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்கள், 8 ஹெலிகாப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர்.

இந்த நிலையில், காட்டுத்தீயை அணைக்கும் பணியில் போர்ச்சுகல் நாட்டுக்கு உதவும் வகையில் ஸ்பெயின், இத்தாலி ஆகிய நாடுகள் களத்தில் இறங்கியுள்ளன. இதன்படி போர்ச்சுகலின் அண்டை நாடான ஸ்பெயின் சார்பில் அவசரக்கால படை மீட்பு படையினர் போர்ச்சுகல் அனுப்பப்பட்டுள்ளனர். மேலும், இத்தாலியும் தீயணைப்பு விமானங்களை அனுப்பி உதவியுள்ளது.

பல வீடுகளைத் தீயில் இருந்து மீட்ட ஸ்பெயின் குழுவினரின் துரிதமான செயல்பாட்டிற்கு உள்ளூர் மக்கள் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

# 41 புறநகர் ரயில்கள் ரத்து-தாம்பரம் ரயில் நிலையத்தில் அலைமோதிய பயணிகள் கூட்டம்!!

சென்னை,ஜூலை. 05–

சென்னை கடற்கரை–தாம்பரம் இடையேயான ரயில் பாதையில் இன்று அவசர கால தண்டவாளப் பராமரிப்பு மற்றும் மின்சாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக 'காலை 10:30 மணி முதல் மதியம் 3:30 மணி வரை' ஐந்து மணி நேரத்திற்கு இயக்கப்பட வேண்டிய 41 புறநகர் மின்சார ரயில்கள் முழுமையாக ரத்து செய்யப்பட்டுள்ளன. இதே போன்ற பராமரிப்புப் பணி அடுத்த ஞாயிற்றுக்கிழமையான ஜூலை 12ஆம் தேதியும் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது. ரயில் சேவைகள் ரத்து செய்யப்படுவது முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், தங்களின் அவசரப் பயணங்களை 10:30 மணிக்கு முன்பாகவே முடித்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் ஆயிரக்கணக்கான பயணிகள் காலை 10 மணிக்கு முன்பாகவே தாம்பரம் ரயில் நிலையத்தில் திரண்டனர். ஒரே நேரத்தில் வழக்கத்திற்கு மாறாகப் பெருந்திரளான மக்கள் கூடியதால், டிக்கெட் கவுண்டர்கள் மற்றும் நடைமேடைகளில் பயணிகள் கூட்டம் அலைமோதியது.



இதனால் தாம்பரம் ரயில் நிலையம் கடுமையான நெரிசலுடன் பரபரப்பாகக் காணப்பட்டது. பயணிகளின் வசதிக்காகத் தெற்கு ரயில்வே மற்றும் போக்குவரத்துத் துறை சார்பில் சில முக்கிய மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன:

பயணிகளின் சிரமத்தைக் குறைக்க தாம்பரம்–செங்கல்பட்டு, அரக்கோணம் மற்றும் திருமால்பூர் ஆகிய பகுதிகளுக்கு இடையே குறிப்பிட்ட கால இடைவெளியில் தெற்கு ரயில்வே சிறப்பு ரயில்களை இயக்கி வருகிறது.

ரயில் சேவை இல்லாததால் ஏற்படும் பாதிப்பைச் சரிசெய்ய, சென்னை கடற்கரை–தாம்பரம் வழித்தடத்தில் வழக்கமாக இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக 50 சிறப்புப் பேருந்துகளை மாநகரப் போக்குவரத்துக் கழகம் இயக்கி வருகிறது.

மதியம் 3:30 மணிக்கு மேல் பராமரிப்புப் பணிகள் நிறைவடைந்தவுடன், புறநகர் மின்சார ரயில் சேவைகள் மீண்டும் வழக்கம்போல் தடையின்றி இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் திருப்பூர் மாநகர் மாவட்ட செயலாளராக பொறுப்பேற்றுள்ள வேல்குமார் சாமிநாதனை திருப்பூர் 1வது வார்டு செயலாளர், ராமசாமி தலைமையில் மாநகர் மாவட்ட எம் ஜி ஆர் மன்ற துணைச் செயலாளர் என். கிருஷ்ணமூர்த்தி, மாநகர் மாவட்ட எம் ஜி ஆர் மன்ற துணைச் செயலாளர், வி .குஞ்சுராமன் டெய்லர் ரகுபதி, சின்னச்சாமி, ஈஸ்வரன், மணி, மற்றும் கழக நிர்வாகிகள் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

# கூடங்குளம் முதலாவது அணு உலையில் பழுது: 562 மெகாவாட் கிடைப்பதில் சிக்கல்!

தூத்துக்குடி, ஜூலை. 05–


தூத்துக்குடி மாவட்டம் கூடங்குளத்தில் உள்ள அணுமின் நிலையத்தில் ரஷிய நாட்டின் நிதி உதவியுடன் தலா ஆயிரம் மெகா வாட் மின் உற்பத்தி திறன் கொண்ட இரண்டு அணு உலைகள் அமைக்கப்பட்டு மின் உற்பத்தி நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் கூடங்குளம் முதலாவது அணு உலையில் ஜெனரேட்டர் பாதுகாப்பு அமைப்பில் ஏற்பட்ட கோளாறால் 1,000 மெகாவாட் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுக்கான 562 மெகாவாட் கிடைப்பதில் தற்காலிக சிக்கல் ஏற்பட்டுள்ளது. இரு அணு உலைகளில் தலா 1,000 மெகாவாட் மின் உற்பத்தி நடைபெற்றுவரும் நிலையில் பழுது ஏற்பட்டுள்ளது. அணு உலையில் ஏற்பட்ட பழுதை சரிசெய்யும் பணியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டு வருகின்றனர்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881

# ஜம்மு காஷ்மீரில் பாதுகாப்பு படையினர் அதிரடி- 2 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை!



ஜம்மு காஷ்மீர், ஜூலை. 05–

ஜம்மு காஷ்மீரின் ஷோபியான் பகுதியில் பாதுகாப்புப் படையினருடனான மோதலில் இரண்டு பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

படையினருக்குக் கிடைத்த உளவுத் தகவலின் படி ஷோபியான் பகுதியில் பயங்கரவாதிகள் ஊடுருவி இருந்தது தெரியவந்தது.

இதனைத்தொடர்ந்து அப்பகுதியில் பாதுகாப்புப் படையினர் ஒருங்கிணைந்த பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொண்டனர். முன்னதாக தேடுதல் வேட்டையில் இறங்கி, அப்பகுதியை முழுவதுமாக சுற்றி வளைத்தனர்.

அப்பகுதியில் தடிமனான இலைகள் மற்றும் அடர்ந்த மரங்கள் நிறைந்துள்ளதால், பயங்கரவாதிகள் தப்பிச் செல்வதைத் தடுக்க ராணுவத்தின் சிறப்புப் பிரிவான விக்டர் போர்ஸ் கூடுதலாக வரவழைக்கப்பட்டன.

அப்போது சுமார் 7.45 மணியளவில் இருதரப்பினருக்கும் துப்பாக்கி சூடு நடைபெற்றது. இந்த சம்பவத்தில் இரண்டு பயன்கிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்ட இவ்விருவர்களும் லஷ்கர்–இ–தைபா அமைப்பின் சந்தேகத்திற்குரிய செயல்பாட்டாளரான ஜாகிர் அகமது கனி மற்றும் அவனது கூட்டாளி லத்தீஃப் பட் என தகவல் வெளியிடப்பட்டது.

இந்நிலையில் மேலும் சில பயங்கரவாதிகள் அப்பகுதியில் பதுங்கியிருக்க கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பாதிகாப்பு படையினருக்கு கிடைத்த சிசிடிவி காட்சிகளில் கொல்லப்பட்ட காணியுடன் மற்றும் ஒருவர் இருப்பது தெரியவந்துள்ளது. இதனைத்தொடர்ந்து பாதுகாப்பு படையினர் அப்பகுதியில் மேலும் பாதுகாப்பை வலுப்படுத்தியுள்ளனர்.

# குற்றாலத்தில் அனைத்து அருவிகளிலும் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி!

தென்காசி, ஜூலை. 05–

தென்காசி மாவட்டம் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் பெய்த மழையினால் மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றாலம் உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.



மெயினருவியில் பாதுகாப்பு வளைவை முற்றிலும் மூழ்கும் வண்ணம் வெள்ள பெருக்கு ஏற்பட்டது. இதனால் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டு இருந்தது. ஜின். 05 காலை முதல் அனைத்து அருவி களிலும் வெள்ளப்பெருக்கு குறைந்த தால் தண்ணீர் சீராக விழுகிறது.

இந்நிலையில் இன்று காலை முதல் சுற்றுலா பயணிகள் மீண்டும் அருவிகளில் குளிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வார விடுமுறை தினத்தை முன்னிட்டு ஏராளமான சுற்றுலா பயணிகள் குற்றாலம் பகுதியில் உள்ள அருவிகளுக்கு வருகை தந்து தங்களது குடும்பங்களுடன் குவிந்தனர். குறிப்பாக மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றால அருவிகளில் சுற்றுலா பயணிகளின் கூட்டம் அலைமோதி வருகிறது. பாதுகாப்பு பணிகளில் போலீசார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.



# இன்றைய கார்ட்டூன்




## லாலு பிரசாத், ராப்ரி தேவிக்கு மீண்டும் 'இசட்' பிரிவு பாதுகாப்பு!

பீகார், ஜூலை. 05–

பீகார் முன்னாள் முதல் மந்திரிகளான லாலு பிரசாத், ராப்ரி தேவி ஆகியோருக்கு மீண்டும் 'இசட்' பிரிவு பாதுகாப்பை அம்மாநில அரசு வழங்கியது.



லாலு பிரசாத் மற்றும் அவரது மனைவி ராப்ரி தேவி ஆகியோருக்கு வழங்கப்பட்டிருந்த இசட் பிளஸ் பாதுகாப்பு கடந்த மாதம் திரும்பப் பெறப்பட்டது. இதனால் அவர்களுக்கு பாதுகாப்பு அளித்து வந்த போலீசார் எண்.10, சர்குலர் சாலை, பாட்னா என்ற முகவரியில் உள்ள அவர்களின் அரசு பங்களாவில் இருந்து வெளியேறினர்.

அத்துடன், அந்த பங்களா அமைச்சர் நந்த கிஷோர் ராமுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதால், ஹார்டிங் சாலையில் புதிதாக ஒதுக்கப்பட்டுள்ள மாற்று இல்லத்துக்குச் செல்லுமாறும் ராப்ரி தேவிக்கு மாநில அரசு உத்தரவிட்டிருந்தது. எனினும், ராப்ரி தேவி தான் வசித்து வரும் பங்களாவை இன்னும் காலி செய்யவில்லை.

இந்நிலையில், முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதை உறுதிப்படுத்தும் மாநில பாதுகாப்புக் குழு பரிந்துரை பேரில் லாலு பிரசாத் மற்றும் ராப்ரி தேவி ஆகியோருக்கு இசட் பிரிவு பாதுகாப்பை பீகார் அரசு மீண்டும் வழங்கியது. இதன்மூலம், இரு தலைவர்களுக்கும் குண்டு துளைக்காத பிரத்யேக வாகனம் மற்றும் சிறப்பு படை பாதுகாப்பு அளிக்கப்படும்.

முன்னதாக, இந்தியாவில் இசட் பிளஸ், இசட், ஒய் மற்றும் எக்ஸ் பிரிவுகளில் விவிஐபிக்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகிறது. அரசியல்வாதிகளுக்கு அச்சுறுத்தல் அடிப்படையில் பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகிறது. மத்திய உள்துறை அமைச்சகம் அவ்வப்போது தலைவர்களுக்கான பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து ஆய்வு மேற்கொண்டு பாதுகாப்பை உறுதி செய்கிறது.

## ஊக்க ஊதியம் பெறும் ஆசிரியர்களுக்கு முக்கிய அறிவிப்பு!

மதுரை, ஜூலை. 05–

ஊக்க ஊதிய உயர்வை தொடர்ந்து பெறும் ஆசிரியர்கள், தாங்கள் பெற்ற கூடுதல் அறிவு, திறன்களை கற்பித்தல் பணியின்போது மாணவர்களுக்கு பயனளிக்கும் வகையில் பயன்படுத்துகின்றனரா என்பதை அவ்வப்போது மதிப்பீடு செய்வதற்கான நடைமுறையை தமிழக அரசு வகுக்க வேண்டும் என உயர்நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டது.

மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி அருகே குன்னாரம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி இடைநிலை ஆசிரியர் ரவிச்சந்திரன்



தாக்கல் செய்த மனு: நான் 1999 ல் இடைநிலை ஆசிரியர் பணியில் சேர்ந்தேன். எம்.ஏ., பி.எட்.,தேர்ச்சியடைந்தேன். இதற்காக 2013 முதல் எனக்கு ஊக்க ஊதிய உயர்வு வழங்கப்பட்டது. அது தவறானது என தணிக்கையில் ஆட்சேபனை எழுப்பப்பட்டது.

எனது ஊதியம் மாற்றியமைக்கப்பட்டது. ஊக்க ஊதிய உயர்விற்காக வழங்கிய கூடுதல் தொகையை திரும்பப் பெற கொட்டாம்பட்டி வட்டார கல்வி அலுவலர் உத்தரவிட்டார். அதை ரத்து செய்ய வேண்டும். இவ்வாறு குறிப்பிட்டார். நீதிபதி பி.புகழேந்தி விசாரித்தார். மனுதாரர் தரப்பு வழக்கறிஞர்: மேல்நிலை கல்வி பாடத்திட்ட பாடங்களில் தகுதிகளை பெறும் இடைநிலை ஆசிரியர்கள் ஊக்க ஊதிய உயர்வு பெற தகுதியானவர்கள். அதற்குரிய அரசாணை நடைமுறையில் உள்ளது. பிந்தைய நடவடிக்கைகள் மூலம் மனுதாரருக்கு ஏற்கனவே வழங்கிய சலுகையை முன்தேதியிட்டு பறிக்க முடியாது.

அரசு வழக்கறிஞர்: பட்டப்படிப்பை முடித்ததற்காக வழங்கிய ஊக்க ஊதிய உயர்வு, நடைமுறையில் உள்ள அரசாணைகளுக்கு முரணானது. தணிக்கையின் போதுதான் இத்தவறு கண்டறியப்பட்டது. இதன் விளைவாக, மனுதாரரின் ஊதியம் திருத்தி அமைக்கப்பட்டு, வழங்கப்பட்ட கூடுதல் தொகை திரும்பப் பெற உத்தரவிடப்பட்டது. இவ்வாறு வாதம் நடந்தது.

நீதிபதி பிறப்பித்த உத்தரவு: மனுதாரர் இடைநிலை ஆசிரியர். மேல்நிலை கல்வி பாடத்திட்டத்தில் பொருளாதாரம் ஒரு பாடமாக இருந்தாலும், அந்த ஒரு காரணத்திற்காக மட்டும் ஊக்க ஊதிய உயர்வு கோர மனுதாரருக்கு உரிமை இல்லை.

**நிரூபிக்கவில்லை**

இடைநிலை ஆசிரியராக மனுதாரர் வழக்கமாக மேற்கொள்ளும் பணிகளுக்கும், அவர் பெற்ற பொருளாதார பட்டப்படிப்பு தகுதிக்கும் இடையே நேரடியான அல்லது நியாயமான தொடர்பு ஏதுமில்லை. அத்தகுதியின் மூலம் அவர் பெற்ற கூடுதல் அறிவு, அவர் கற்பிக்கும் மாணவர்களுக்கு பயன்படும் என்றோ அல்லது ஊக்க ஊதிய உயர்வு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதன் நோக்கத்தை நிறைவேற்றும் என்றோ மனுதாரர் நிரூபிக்கவில்லை. அரசாணைப்படி எம்.ஏ.,பொருளாதாரம் தகுதியை பெற்றதற்காக ஊக்க ஊதிய உயர்வு பெற மனுதாரர் தகுதியற்றவர். மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

உயர்கல்வி தகுதி பெறுவதற்காக வழங்கப்படும் தொடர் முன்பணம் மற்றும் ஊக்குவிப்பு ஊதிய உயர்வு திட்டத்தை ரத்து செய்வது குறித்த கொள்கை முடிவை, அரசு 2020 ல் எடுத்தது. இருப்பினும், முந்தைய கொள்கை முடிவின் கீழ் வழங்கப்பட்ட ஊக்குவிப்பு ஊதிய உயர்வுகளை பல ஆசிரியர்கள் தொடர்ந்து பெற்று வருகின்றனர். ஊக்க ஊதிய உயர்விற்காக செலவிடப்படும் தொகை வரி செலுத்துவோரின் பணம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஊக்க ஊதியம் அறிமுகப்படுத்தப்பட்டதன் நோக்கத்தை அது நிறைவேற்றும் வரையில் மட்டுமே இத்தகைய செலவினத்தை நியாயப்படுத்த முடியும்.

**மதிப்பீடு**

ஊக்க ஊதிய உயர்வை தொடர்ந்து பெறும் ஆசிரியர்கள், தாங்கள் பெற்ற கூடுதல் அறிவு, திறன்களை கற்பித்தல் பணியின்போது மாணவர்களுக்கு பயனளிக்கும் வகையில் பயன்படுத்துகின்றனரா என்பதை அவ்வப்போது மதிப்பீடு செய்வதற்கான நடைமுறையை தமிழக அரசு வகுக்க வேண்டும். அம்மதிப்பீட்டின் அடிப்படையில், ஊக்க ஊதிய உயர்வு பெற்று வரும் ஆசிரியர்களுக்கு சலுகையை தொடர்ந்து வழங்கலாமா என்பது குறித்து, அரசு முடிவெடுக்க வேண்டும். இவ்வாறு உத்தரவிட்டார்.

## மின்சார ரீடிங் எடுக்கும் ஊழியர்கள் செல்போன் வாங்க ரூ.10,000 வழங்க நடவடிக்கை!



சென்னை, ஜூலை. 05–

தமிழ்நாட்டில் மின்சார ரீடிங் எடுக்கும் ஊழியர்களுக்கு ரீடிங் எடுக்க புதிய மொபைல் போன் வாங்க ரூ. 10,000 வழங்கப்பட உள்ளது.

தமிழ்நாட்டில் வீடு, வணிக நிறுவனங்களில் மின்சார மீட்டர் ரீடிங் எடுக்கும் ஊழியர்கள் துல்லியமாக மீட்டர் ரீடிங் எடுக்க மொபைல் போன் செயலியைப் பயன்படுத்த அரசு உத்தரவிட்டுள்ளது. இதன்படி, ஊழியர்களின் பணியை எளிதாக்கவும், டிஜிட்டல்மயமாக்கலை ஊக்குவிக்கும் வகையிலும் ஊழியர்கள் புதிய மொபைல் போன், சிம் கார்டு வாங்குவதற்காக தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் ரூ. 10,000 வழங்கவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், இந்தத் திட்டத்தின்கீழ் ஊழியர்களுக்கு தங்குதடையற்ற இணைய சேவை மற்றும் அழைப்பு வசதிக்காக போஸ்ட் பெய்ட் சியுஜி சிம் கார்டுகளும் வழங்கப்பட உள்ளன.

இதன் மூலம் மீட்டர் ரீடிங் எடுக்கும் பணிகளில் தாமதம் ஏற்படுவது தவிர்க்கப்பட்டு, நுகர்வோரின் மின் பயன்பாட்டு விவரங்களை உடனுக்குடன் கணினியில் பதிவேற்றம் செய்யவும் வழிவகை ஏற்படுத்தப்படும்.

இருப்பினும், இந்தத் தொகையானது ஊழியர்களுக்கு தொடர்ந்து வழங்கப்பட மாட்டாது என்றும், ஒருமுறை பெற்றுக் கொண்டால் அடுத்த 5 ஆண்டுகளுக்குப் பிறகுதான் இந்த வசதியைப் பெற முடியும் என்றும் கூறப்படுகிறது.

### மதுரை அரசு ஆய்வக நுட்புநர் சங்க விழாவுக்கு

## எம்எல்ஏக்கள் வராததால் அமைச்சர் நிர்மல்குமார் அதிருப்தி!




மதுரை, ஜூலை. 05–

மதுரை அரசு ஆய்வக நுட்புநர் சங்க விழாவுக்கு எம்எல்ஏக்கள் வராததால் அமைச்சர் நிர்மல்குமார் அதிருப்தி அடைந்துள்ளார். விழா அழைப்பிதழில் தவெக எம்எல்ஏக்கள் கோபிசன், கல்லாணை ஆகியோரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இரு எம்எல்ஏக்களும் விழாவுக்கு வராததால் அமைச்சர் நிர்மல்குமார் அதிருப்தி அடைந்து விழா மேடையில் அமராமல் புறப்பட்டுச் சென்றார்.

## 30% எலக்ட்ரிக் வாகனம்: காற்றை தூய்மையாக்க அதிரடி முடிவு!

டெல்லி, ஜூலை. 05–

டெல்லி முதல்வர் ரேகா குப்தா தலைமையிலான அரசு, தலைநகரின் காற்று



மாசுபாட்டைக் கட்டுப்படுத்தவும், பசுமைப் போக்குவரத்தை ஊக்குவிக்கவும் 'டெல்லி மின்சார வாகனக் கொள்கை 2026'ஐ அதிகாரப்பூர்வமாக வெளியிட்டுள்ளது. இக்கொள்கை கடந்த 1ம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளதுடன், மார்ச் 31, 2030 வரை நடைமுறையில் இருக்கும். டெல்லியின் வாகனக் கட்டமைப்பில் குறைந்தபட்சம் 30 சதவீதத்தையாவது மின்சார வாகனங்களாக மாற்றுவதே இக்கொள்கை யின் முக்கிய நோக்கமாகும். இதன் மூலம் டெல்லியின் ஒட்டுமொத்த காற்று மாசுபாட்டில் 23 சதவீதம் பங்களிக்கும் வாகனப் புகையைக் கணிசமாகக் குறைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

## தமிழகத்தில் மழைக்கு வாய்ப்பு!



சென்னை, ஜூலை. 05–

வங்கக் கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வுப் பகுதி, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுவடைந்துள்ளதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது. அதன் அறிக்கை:

வங்கக் கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வுப் பகுதி மற்றும் தென்மேற்கு பருவமழை காரணமாக, தமிழகத்தில் நேற்று கனமழை பெய்தது. அதிகபட்சமாக, நீலகிரி மாவட்டம் அவலாஞ்சியில், 19 செ.மீ., மழை பதிவானது.

தற்போது, வடமேற்கு வங்கக் கடல் பகுதிகள், அதை ஒட்டிய பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி, நேற்று காலை 5:30 மணி அளவில், வடமேற்கு வங்கக் கடல் பகுதிகள், அதை ஒட்டிய வடக்கு ஒடிஷா – மேற்கு வங்க கடலோர பகுதிகளில், ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுப்பெற்றுள்ளது. இது, அடுத்த மூன்று நாட்களில், மேற்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து, வடக்கு ஒடிஷா மற்றும் வடக்கு சத்தீஸ்கர் பகுதிகளை அடையும்.


இதனால், தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னல் பலத்த காற்றுடன் இன்று லேசான மழைக்கு வாய்ப்பு உள்ளது.

மேலும், நாளை முதல் வரும் 10ம் தேதி வரை, தமிழகத்தில் லேசான மழைக்கு வாய்ப்பு உள்ளது. சென்னையில் இன்று லேசான மழைக்கு வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## உக்ரைனின் தொழில் நகரத்தை கைப்பற்றிவிட்டதாக புதின் அறிவிப்பு; ஜெலென்ஸ்கி மறுப்பு!

கீவ், ஜூலை. 05–

கிழக்கு உக்ரைனின் முக்கிய தொழில் நகரமான கொஸ்தியந்தினிவ்காவைத் தங்களது படைகள் முழுமையாகக் கைப்பற்றிவிட்டதாக ரஷிய ராணுவத் தலைமை தளபதி ஜெனரல் வலேரி கெராசிமோவ், அதிபர் புதினிடம் அதிகாரப்பூர்வமாகத் தெரிவித்தார். இதனை ஒரு "முக்கிய உத்திசார் வெற்றி" என புதின் பாராட்டினார்.



ஆனால், ரஷியாவின் இந்த வெற்றிக் கூச்சலை உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி அடியோடு மறுத்துள்ளார். "இது ரஷியாவின் அப்பட்டமான பொய், அந்த நகரம் ரஷியாவின் கட்டுப்பாட்டில் இருந்தால், புதின் அங்கு வந்து என்னைச் சந்திக்கத் தயாரா? உண்மை நிலை முற்றிலும் வேறானது" என்று அவர் சவால் விடுத்துள்ளார். மேலும், அமெரிக்காவின் சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி டிரம்பை ஏமாற்றவே புதின் இந்த உலக மகா பொய்யைக் கூறுகிறார் என்றும் அவர் குற்றச்சாட்டினார். அதே நேரத்தில், உக்ரைன் ரஷியாவின் 2–வது பெரிய நகரான செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் உள்ள முக்கிய எண்ணெய் கிடங்கு மற்றும் குரோன்ஸ்டாட் ராணுவத் தளம் மீது 72 டிரோன்களை ஏவி அதிரடித் தாக்குதல் நடத்தியுள்ளது.

இதனால் ரஷியாவில் கடும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதோடு பெல்கோரோட் நகரம் முற்றிலும் இருளில் மூழ்கியுள்ளது. ரஷியாவின் பதில் தாக்குதலில் உக்ரைனின் ஜாபோரிஷியாவில் 2 குழந்தைகள் உள்பட 8 பேர் காயமடைந்துள்ளதால் அங்கு பெரும் போர் பதற்றம் நீடிக்கிறது.

## ரீல்ஸ் மட்டுமே வாழ்க்கையல்ல; மாணவர்கள் நல்ல அரசியலை பழக வேண்டும்: கமல்ஹாசன் அறிவுரை!

விழுப்புரம், ஜூலை. 05–

விழுப்புரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் கலந்துகொண்டு பேசினார். அப்போது, மாணவர்கள் மற்றும் இன்றைய இளைஞர்களின் அரசியல் பங்களிப்பு குறித்து அவர் பல்வேறு கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.



"மாணவர்கள் அனைவரும் நடப்பு அரசியலை உற்று கவனிக்க வேண்டும். 'ரீல்ஸ் வீடியோக்களில் நல்லது, கெட்டது என இரண்டுமே உள்ளன. அதில் பல நல்ல விஷயங்களும் இருக்கின்றன.

செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பமும் அப்படித்தான். அதனை வியாபாரமாக்காத வரை, கற்றுக் கொள்பவர்களுக்கு அது மிகவும் நல்லது. எனக்குத் தெரியாத ஒரு விஷயத்தைத் தெரியாது என்று சொல்லும் தைரியம் எனக்கு எப்போதும் உண்டு.

எதிர்காலத்தில் எங்களைத் தவிர்த்துவிட்டு யாரும் அரசியல் செய்ய முடியாது என்ற நிலையை நாங்கள் உருவாக்குவோம். மாணவர்கள் நல்ல அரசியலைப் பழகிக் கொள்ள வேண்டும்.

மக்களுக்காக உழைக்கும் நல்ல அரசியல்வாதி யார் என்பதை அடையாளம் காணும் வயது உங்களுக்கு வந்துவிட்டது. ரீல்ஸ் மட்டுமே வாழ்க்கை இல்லை என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும்," என்று கமல்ஹாசன் பேசினார்.

## தமிழகத்தில் காற்றாலைகள் மூலம் ஒரே நாளில் 12.43 கோடி யூனிட் மின்சாரம் உற்பத்தி!

சென்னை, ஜூலை. 05–

தென்மேற்கு பருவக்காற்று தீவிரமடைந்துள்ள நிலையில் காற்றாலை மின்சார உற்பத்தியில் தமிழகம் புதிய சாதனை படைத்துள்ளது. தமிழகத்தின் காற்றாலை மின்சார உற்பத்தி நாளுக்குநாள் அதிகரித்து புதிய உச்சங்களை தொட்டு வருகிறது. நேற்று முன்தினம் (3ம் தேதி) எப்போதும் இல்லாத அளவாக ஒரேநாளில் 12.43 கோடி யூனிட் மின்சாரம் கிடைத்துள்ளது. மேலும், ஜூன் 29ம் தேதி 10.93 கோடி யூனிட், 30ம் தேதி 11.51 கோடி, கடந்த 1ம் தேதி 11.80 கோடி, 2ம் தேதி 11.88 கோடி, 3ம் தேதி 12.43



கோடி யூனிட் என தொடர்ந்து 5 நாட்கள் தினமும் 10 கோடி யூனிட்களுக்கு மேல் மின்சாரம் உற்பத்தியாகியுள்ளது. காற்றாலை மின் உற்பத்தி மூலம் தொடர்ந்து 5 நாட்கள் 10 கோடி யூனிட்டுக்கு மேல் மின்சாரம் கிடைப்பது இதுவே முதல்முறையாகும்.

## 10 ஆண்டு நெடுஞ்சாலை மாஸ்டர் பிளான் தயாராகிறது!

கோவை, ஜூலை. 05–

தமிழகத்தில் அடுத்த 10 ஆண்டுக்கு தேவையான நெடுஞ்சாலை 'மாஸ்டர் பிளான்' தயாரிக்கப்படும் என செயல் திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




முதல்வர் விஜய் தலைமையிலான அரசில், ஐந்து ஆண்டுகளில் என்னென்ன திட்டங்கள் செயல்படுத்த வேண்டும் என்கிற இலக்கோடு 'வெற்றித் தமிழகம்' என்கிற தலைப்பில் செயல் திட்ட அறிக்கை வெளியிட்டுள்ளது.

செயல்பாட்டுக்கு கொண்டு வர, முதலாண்டு, முதலாண்டு முதல் மூன்றாண்டு வரை, மூன்றாண்டு முதல் ஐந்தாண்டு வரை என மூன்று பிரிவாக திட்டங்கள் பிரிக்கப்பட்டு உள்ளன. வரும் பட்ஜெட்டில் நிதி ஒதுக்க, துறை வாரியாக அதிகாரிகளுடன் முதல்வர் ஆலோசிக்கிறார். அந்தந்த துறையில் தற்போது செயல்படுத்தும் திட்டங்கள், அடுத்தடுத்து செயல்படுத்த திட்டமிட்டுள்ள பணிகள் விவாதிக்கப்படுகின்றன.

பாதுகாப்பான சாலை மாநில நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை தொடர்பான ஆய்வு கூட்டம் முதல்வர் தலைமையில் சமீபத்தில் நடந்தது. பாதுகாப்பான சாலை வழித்தடங்களை உருவாக்கும் நோக்கில், ஏ.ஐ., தொழில்நுட்பம் பயன்படுத்தி போக்குவரத்து விதிமீறல் தடுக்கும் அமைப்பு உருவாக்கப்படும். 'பாதுகாப்பான சாலைகள் இயக்கம்' எனும் இத்திட்டத்துக்கு ரூ.500 கோடி ஒதுக்கப்படும். அவசர கால சிகிச்சை மையங்கள் ஏற்படுத்தப்படும்.

'நம்ம சாலை' செயலி மேம்படுத்தப்படும். அரசு போக்குவரத்து கழகம், பிற அமைப்புகள், பொதுமக்கள் பங்களிப்புடன், சாலைகளில் உள்ள பள்ளங்கள் முன்னரே கண்டறியப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். சாலை பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பணிக்கு ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாக, ரூ.2,000 கோடி ஒதுக்கப்படும். எட்டு வழி சாலை சென்னை – கன்னியாகுமரி எட்டு வழிச்சாலை திட்டத்துக்கு முன்னுரிமை வழங்க மத்திய அரசை வலியுறுத்தப்படும். சென்னையின் நான்கு முக்கிய நுழைவு, வெளியேறும் சாலைகளில் நெரிசலை குறைக்கும் ஆய்வு செய்யப்படும். அடுத்த 10 ஆண்டுக்கு தேவையான நெடுஞ்சாலை 'மாஸ்டர் பிளான்' உருவாக்கப்படும்.

முதலாவது ஆண்டில் ராமேஸ்வரம் தீவை சுற்றி கடலோர படகு சேவை, கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறை மற்றும் திருவள்ளுவர் சிலைக்காக, மூன்று புதிய பயணிகள் படகுகள், ரூ.1,07,487 கோடிக்கு மாநில கடல்சார் நீர்வழி மாஸ்டர் திட்டம் தயாரித்து மத்திய அரசிடம் சமர்ப்பிக்க முடிவு செய்யப்பட்டது. பயணியர் கப்பல் சேவை பண்டைய தமிழர்களின் கடல்சார் வணிகப் பாரம்பரியத்தை மீட்டெடுக்கும் வகையில், நாகப்பட்டினம் – கொழும்பு (இலங்கை) மற்றும் நாகப்பட்டினம் – கோலாலம்பூர் இடையே பயணியர் கப்பல் சேவை துவங்க தேவையான ஏற்பாடு மேற்கொள்ளப்படும்.

ராமேஸ்வரம் – தலைமன்னார் (இலங்கை) இடையே பயணியர் படகு சேவை துவக்க நடவடிக்கை எடுக்கப்படும். கடலூர் துறைமுகம், புதிய தொழில்துறை துறைமுகமாக மேம்படுத்தப்படும். சென்னை – புதுச்சேரி இடையே சுற்றுலா நோக்கில் படகு சேவை இயக்க தொழில்நுட்ப–பொருளாதார சாத்தியக்கூறு ஆய்வு செய்யப்படும். நாகப்பட்டினம் துறைமுகம் மேம்பாட்டுக்கான சாத்தியக்கூறு ஆய்வு, வாரிய ஒப்புதலுடன் மேற்கொள்ளப்படும்.

ஐந்து ஆண்டுகளுக்குள் மீனம்பாக்கம் விமான நிலையம் – கிளாம்பாக்கம் 13.5 கி.மீ., நான்கு வழி மேம்பாலம், சென்னை, தூத்துக்குடி, கோவையில் விரைவு சாலை உருவாக்குதல், மாநில நெடுஞ்சாலைகளில் ஒவ்வொரு 50 கி.மீ.,க்கும் பயணியர் ஓய்வு வசதிகள் மற்றும் மதுரை நெல்பேட்டை – அவனியாபுரம் வரை நான்கு வழிச்சாலையாக மேம்படுத்த, செயல் திட்ட அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020